MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஸ்ரீ ஆனிமீ பகுதி சு.
VOL. 2. JUNE & JULY 1925. No. 6.

உபநிஷத்விவரணம்.

உபயவேதாந்த வித்வான் எம்பார் கிருஷ்ணமாசார்யஸ்வாமி எழுதுவது

[முதற்றொகுதியின் -ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு விகாரங்களின் ஸ்வரூபத்தை விசாரித்துணர்ந்தவர் அதனை ஸத்யமாகக்கொள்ளலாகாதென்று ஒரு சிலர் பேசுமதை விசாரித்துப் பார்ப்போம்.

தாம்பைக் கண்டு ப்ரமித்து அதனைப் பாம்பு என்று வ்யவஹரிக்கும்போது பாம்பு என்னும் பெயரானது, உண்மையான பொருளை யுடையதாகாமல் சொல்மாத்திரத்தில் வழங்கப்படுவதால், அங்கு பாம்பாகியபொருள் இல்லாமையால் அது பொய்யென்று கொள்ளலாம்; குடம், பானை முதலிய ம்ருத்விகார த்ரவ்யங்களைக் கண்டு அவற்றைக் குடம் பானை யென்ற சொற்களால் வ்யவஹரிக்கும்பொழுது அங்கு அக்குடம் பானைகளாகிய பொருள்கள் உள்ளனவாயிருக்க அவற்றையும் இல்லையென்று சொல்லுதல் உபபந்நமன்று.

ஏனெனில், பெயர்களெல்லாம் ஒவ்வொன்றும் பொருளுடையதாகவும் பொருள்களெல்லாம் ஒவ்வொன்றும் பெயருடையதாகவுமுள்ளன. பொருளில்லாமலே பெயர்களிருக்குமாகில் அப் பெயர்கள் கடலோசைபோலப் பொருளுணர்ச்சிக்குக் காரணமாகாது,

வெற்றொலியாயிருக்கும். அவ்வாறன்றிச் சொற்கள் பொருளுணர்ச்சியை யுண்டாக்குதலால் பாம்பென்னும் பதத்திற்கு உலகில் ஒரு பொருளுண்டு. தாம்பென்னும் பதத்திற்கும் தனியே வேறொரு பொருளுண்டு. ஆனால், தாம் பைக்கண்டு பாம்பென வ்யவஹரிக்கும் போது மட்டும் அங்கு பாம்பென்னும் சொல்லின் பொருளில்லையாகையால் இதைப் பொய்யென்று கொள்ளலாம். இதைக்கொண்டு, ம்ருத்பிண்டவிகாரத்ரவ்யங்களான குடம், பானைகளை வ்யவஹரிக்கும்பொழுதும் பொருளில்லாத வெறும்பேச்சு என்று சொல்லுவது கூடாதென்று தோன்றுகின்றது.

இன்னும், "மண்ணல்லது குடம் பானை என்ற வெவ்வேறு பொருள் ஒன்றுமில்லை; அம்மண்ணே ப்ரக்ருதியின் விகாரமாயிருக்கிறது. 'விகாரமென்பது உண்மையாக அப்ரகிருதியினின்றும் வேறுயில்லை யாதலால் பேச்சுக்கும் தோற்றத்துக்கும் இலக்காயிருக்கும் விகாரங்களெல்லாம் முடிவில் பொய்யேயாம்." எனில் அதுவும் பொருந்தாது.

மண்ணேயல்லது அதில், குட முதலான வேறொரு பொருளும் இல்லையென்றால் அம் மண்ணின் உருவ வேறுபாடுகளே அக்குட முதலிய பதங்களின் பொருளென்று கொள்ளவேண்டியதாகும்; குடம் பானை முதலிய விகாரத்ரவ்யங்கள் மண்ணேயானாலும் அம் மண்ணின் வேறுபட்ட ஆகார பேதங்களை யுடையவாய், தனித் தனியாயிருப்பதால், வெவ்வேறு பெயர்கொள்ளும் பொருள்களாம். ஆகையால், "குடம், பானை முதலியன பொருளின்றி வெறும் பேச்சாதலால் பொய்" யென்று சொல்லுவது பொருந்தாதிருக்கிறது.

அன்றியும், ப்ரகிருதியாம் மண்ணே மெய்; குடம் பானை முதலிய விகாரங்கள் பொய்யெனக் கொள்ளில் பொய்யான தாம்புப் பாம்பு தோன்றும்போது அதற்கு இடமான கயிறு தோன்றாதிருப்பதுபோல அக் குடம் பானைகள் தோன்றும்போது அவற்றிற்கு இடமான மண் தோன்றாதிருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் மண்ணும் சேர்ந்தே தோன்றுகின்றது. தாம்புப் பாம்பில், இவ்வாறு தாம்பும் பாம்பும் சேர்ந்து தோன்றுவதில்லை. மெய்யான தாம்பு

தோன்றும்பொழுது பொய்யான பாம்பு தோன்றா தொழிந்துவிடுகிறது. அப் பாம்புபோலக் குடம் பானை முதலியனவும் பொய்யாயிருக்குமானால் மெய்யான மண் தோன்றும்போது அக் குடம் பானைகள் தோன்றா தொழியவேண்டும். அவ்வா றில்லாமையால் கார்யத்ரவ்யம் பொய்யென்று சொல்வது பொருந்தாதிருக்கிறது.

இனி, "உபநிஷத் வாக்கியங்களே விகாரங்கள் பொய்யெனக் கூறுகின்றன; அவ் வழிபற்றியே யாம் சொல்வதல்லது புதிய வழியிற் செல்லவில்லை" யென்று சிலர் கூறுகின்றனர்; அவ் வுபநிஷத் வாக்கியங்களையும் விசாரிப்போம். பன்னிரண்டுவருடம் குருகுலவாசம்பண்ணி வித்யாப்பியாசம் செய்துவந்த புத்திரனை அவன் பிதா கண்டு அவன் கொண்டிருக்கும் மமதையால் இவன் ஸத்வித்யாப்பியாஸம் செய்திலன் என்றறிந்து, அவனுக்கு ஸத்வித்யையை உபதேசிக்க வேண்டி, யாதொன்றைக் கேட்ட மாத்ரத்தாலே கேட்டறியாதனவெல்லாம் கேட்டறிந்தனவாகவும், சிந்திக்கப்படாதனவெல்லாம் சிந்திக்கப்பட்டனவாகவும், தியானிக்கப்படாதனவெல்லாம் தியானிக்கப்பட்டனவாகவும் விளங்குமோ, அப்படிப்பட்ட பொருளை நீ குருவினிடம் கேட்டிருக்கிறாயா? என்று கேட்க, அவ்வாறு வினவப்பட்ட புத்திரன், அப்படிப்பட்ட பொருளும் ஒன்று உண்டோ? என்று அசம்பவாசங்கை செய்ய, அவ்வாசங்கையைப் போக்கக் கருதிய பிதா அவனை நோக்கி, ஒரு மிருத்பிண்டத்தை யறிந்தால் அந்த மிருண்மயமான குடம் பானை முதலியனவெல்லாம் அறியப்பட்டனவாம். அதுபோல எல்லாப் பொருளையு மறியும்படியான ஒரு பொருளை யறிதலும் உண்டு என்றார்.

இவ் வுதாரணத்தால், வெவ்வேறு தன்மையுடைய குடம் பானை முதலிய கார்ய வஸ்துக்களுக்கு ஒரு மிருத்பிண்டம் காரணமாவதுபோலே வெவ்வேறு தன்மையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறுபட்டு நிற்கும் நிலம், நீர், தீ, காற்று முதலிய பல பொருள்களுக்கும் ஓர் உபாதான காரண மிருக்கவேண்டுமெனச் சொன்னார் என்று எண்ணுதற்கு இடமுண்டாயிற்று; ஆனால் "காரண மறியப்பட்டால் காரிய வஸ்துக்கள் எப்படி அறியப்படும்? கார்யங்கள் பின் உண்டாகின்றன; காரணமோ காரியமுண்டாவதற்கு

முன்பே யிருக்கின்றது; காரிய வஸ்துக்களுக்குப் பெயரும், பயனும், காரணத்தின் வேறுபட்டிருக்கின்றன; காரணத்துக்கும் அவ்வாறே காரியவஸ்துவைக் காட்டிலும் பெயரும் பயனும் வேறுபட்டிருக்கின்றன. இவ்வாறாக உபாதான காரணமும் காரிய வஸ்துவும் அத்யந்தம் பின்னமா யிருக்கச் செய்தே மிருத்பிண்டத்தை யறிந்தால் அதன் கார்யமான வேறு பொருள்கள் எவ்வாறு அறியப்பட்டதாகும் என்று அவனுக்கு அசத் காரியவாதசங்கை நிகழாநிற்பது கண்டு, அதைப் போக்கக் கருதிப் பின்வரும் வாக்கியமெழுகின்றது. "வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்"* என்று.

இதன்பொருள்:- குடம், பானை முதலிய காரியங்கள் அவை தோன்றுதற்கு முன்பு எவ்வகையாலு மில்லாதனவாய் மிருத்பிண்டமாகிய காரணத்தால் உண்டான வேறு பொருள்கள் என்பது பொய்; அவைகளும் தமக்குக் காரணமான மிருத்திகை என்று சொல்லுவதே ஸத்யம் என்பதாம். இங்கு, மிருத்திகை என்றொழியாது "ம்ருத்திகேத்யேவ ஸத்யம்" (மண்ணென்பதே ஸத்யம்) என்று சொல்லியிருப்பதால் "அக்குட முதலியனவும் ம்ருத்திகையே யென்று யான் சொல்வதன்று. கணாதர் முதலிய சில ருஷிகள் "காரியங்களெல்லாம் காரணத்தில் நின்றும் வேறாகவே புதிதாயுண்டாகும் பொருள்கள்" என்று பேசுவதிற்கெதிராக, வேறு பலரிஷிகள் "குட முதலிய காரியங்கள் அவற்றின் காரணமாகிய மிருத்திகையே வேறன்று" என்று பேசுகின்றனர். இவ்விரண்டு பக்ஷங்களுள், காரணமான மிருத்திகை என்பதே ப்ராமாணிகமானபக்ஷம் என்று ஸூசிக்கப்படுகிறது. இதனால் அசத்கார்யவாதபக்ஷம் ப்ரத்யக்ஷப்ரமாண விருத்தமென்றும், ஸத்கார்யவாதபக்ஷம் ப்ரத்யக்ஷப்ரமாணஸித்தமென்றும் காட்டியதாயிற்று.

---

* இவ் வாக்கியத்திற்கு இங்கு சொல்லுவது ஸம்ப்ரதாய பரம்பராப்ராப்தமான அர்த்தமன்று. ஆயினும், ஸித்தாந்தத்துக்கு விருத்தமாயும் வாக்ய ஸ்வாரஸ்யத்துக்கு அநுகுணமாயும் இருப்பதால் இவ்வாக்கியம் தங்கள் பக்ஷத்துக்கே அநுகூலமெனப் பிறர் கொள்வது தகாதெனக் காட்டவேண்டிய முறையிற் சொல்லப்படுகிறது. உடையவர் அருளிச்செய்த அர்த்தமே ஆதரணீயமாம். அவ்வர்த்தம் உபநிஷத் வ்யாக்யானக் கிரமத்தில் நிரூபிக்கப்படும்.

இங்ஙனம் காட்டவே, "தண்ணீரெடுப்பதற்குக் குடத்தை உப யோகிப்பதும், பசனத்துக்குப் பானையை உபயோகிப்பதுமான வ்யவ ஹார நியமம் காணப்படுகிறதே; குடமும் பானையும் வெவ்வேறு யில் லாமல் அவற்றின் காரணமாகிய மண்ணாகவே யிருக்குமாகில் அம் மண்ணாகிய மிருத்பிண்டத்தைக் கொண்டே தண்ணீரெடுக்கவும், சமைக்கவும் பிரவ்ருத்தியுண்டாக வேண்டுமே! அவ்வாறில்லாமை யால் "மிருத்திகேத்யேவ ஸத்தியம்என்று சொல்லுவதெவ்வாறு பொருந்தும்"? என்னும் ஆசங்கையுண்டாக அதனைப் பரிஹரிக்க வேண்டி, "வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்" என்னும் வாக்கிய மெழுந்தது.

இதன் பொருள்:— (குடம், பானை முதலியன மண்ணேயானு லும் அம்மண்ணில் காரணமாயிருந்த பிண்டாவஸ்தைபோய் விகார மான வெவ்வேறு அவத்தைகளுண்டாவதால்) "விகார":— அவ் வ்விகாரமும், "நாமதேயம்":— அதையிட்டுவரும் வேறுபெயரும், "வாசாரம்பணம்":— வ்யவஹாரத்துக்கு அடியாகும் என்பதாம்.

இங்குவாசாரம்பணம் என்பது ஸமஸ்தபதம் ஆரப்யதே அநே நேதி ஆரம்பணம்:— ஆரம்பிக்கைக்குஅடி என்றபடி, 'வாசா' என் பது ஆகாராந்தமானபதம்; வாக் என்னும் பதத்தின் ஸ்தானத்தில் உபயோகிக்கப்பட்டது. வ்யவஹாரம் வாக்கை முன்னிட்டே வருவதால் வாசா என்னும் பதத்திற்கு வ்யஹாரம் என்று பொரு ளாகும், ஆகவே, வாசாரம்பணம் என்றது, வ்யவஹாரம் நிகழ்தற்கு அடி என்றதாயிற்று. இத்தொடர்மொழிக்கு இவ்வறுபொருள் கொள்வதுப்ரகரணத்துக்குச் சேருமேயல்லது, விகாரங்கள்பொய்; காரணமாம் ம்ருத்திகையேமெய். என்று பொருள் கொள்வது ப்ரகரணத்துக்குச்சேராது.

இவ்வுலகனைத்துக்கும் உபாதானகாரணமான ஒரு வஸ்துவை (பரப்ரும்ம ஸ்ரூபத்தை) அறிந்தால், உபாதேயமான இவ்வனைத் துலகும் அறியப்பட்டதாம் என்றன்றோ இங்கு சொல்லப்படுகிறது; மெய்யான பிர்ம்மஸ்வரூபத்தை அறிந்தால் பொய்யான இவ்வனைத் துலகும் எவ்வாறு அறியப்பட்டதாகும்? மெய்வேறு; பொய்வேறு.

அவை அத்யந்தம் பின்னமாயு மொன்றோடொன்று விருத்தமாயு முள்ளன. இவ்விரண்டு ஸ்வரூபமுமொன்றாய் (அபின்னமாய்) இருந்தாலன்றோ ஒன்றையறிந்தால் மற்றொன்றையும் அறியலாம். அப்படியல்லாமல் மெய்யறியப்படாதிருக்குமளவும் பொய்புலப் பட்டுக்கொண்டிருக்கும். மெய்புலப்பட்டபொழுதே பொய் மறைந்துவிடும். இப்படியிருப்பதால் மெய்யான உபாதான ஸ்வ ரூபத்தை அறிந்தால் பொய்யான உபாதேயவஸ்துக்கள் அறியப் பட்டதாகும் என்பது பொருந்தாதிருக்கிறது.

அன்றியும், ஜகந்மித்தியாத்வம் விவக்ஷிதமாகில், இச்சமயம் புலப்படும் இவ்வனைத்துலகும், யாதொன்றையறிந்தால் பின்பு புலப் படாதோ (பாதிதமாய்விடுமோ) அப்படிப்பட்டவஸ்துவை நீ கேட் டறிந்தாயா? என்றன்றோ உபக்ரமவாக்கியமிருக்கவேண்டும்; அப் படியில்லாமையாலும் அது பொருந்தாதிருக்கிறது.

அன்றியும் "ஸந்மூலாஸ்ஸோம்யேமா:" "ஸர்வா: ப்ரஜா: ஸதா யதநா:" "ஸத்ப்ரதிஷ்டா:" என்றும், "ஐததாத்ம்ய மிதம்ஸர்வம்" என்றும் மேல் உபஸம்ஹார வாக்கியங்களால் சொல்லப்படும் அபே தமும் சேரமாட்டாது. இவ் வாக்கியங்கள் இவ் வுலகுக்குப் பரப் ருஹ்மம் உபாதான காரணமென்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டு பிருஹ்மத்துக்கும் ஜகத்துக்கும் அபேதத்தையே ஸ்திரப்படுத்து கின்றன. ஸத்யம், அஸத்தியம் இவ் விரண்டுக்கும் எவ்வகையாலும் ஐக்கியம் ஸம்பவிக்கமாட்டாது. ஆகையாலும் ஜகத்தை மித்யை என்று கொள்வது பொருந்துவதாயில்லை.

அன்றியும் கார்யங்களைப் பொய்யென்று கொண்டால் ஸத்கார்ய வாதம் உபபந்நமாகாது. ஏனெனில் "உண்மையில் இல்லாத கார்யங் கள் தோஷத்தால் உள்ளதுபோலத் தோற்றுவதால் பொய்" யென்று சொல்வோமென்றால், அப்படியான கார்யத்தை ஸத்கார்யமென்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? "உண்மையில் இல்லையேயானு லும் வ்யவஹார தசையிலிருப்பதால் ஸத்காரிய வாதத்துக்கு ஹாநியில்லை" என்றால், உண்மையிலில்லாம லிருக்கச்செய்தே வ்யாவ ஹாரிகஸத்தை என்றும் ஒரு பாரிபாஷிகமான ஸத்தையைக்கொண்டு

சத்கார்ய வாதிகளோடு சேருதலியலாது. உண்மையாகவே காரியங்களை அங்கீகரிக்கும் வைசேஷிகர்களை ஸத்கார்ய வாதிகளின் கோஷ்டியினின்றும் விலக்குதற்குக் காரணமுமில்லை. "ஸத்கார்யவாதிகள், முன்னிருந்த த்ரவ்யமே கார்யமாமத்தனையொழிய அபூர்வ த்ரவ்ய முண்டாவதில்லையெனக் கொள்வர்; வைசேஷிகர்கள் இப்பக்ஷத்துக்கு இசையார்; ஆகையால் இவர்கள் சத்கார்ய வாதிகளிற் சேரார்; யாமோ அப்படிக்கொள்ளாது முன்பிருந்த த்ரவ்யமே கார்யமாகத் தோன்றுகின்றதென்று சொல்வதால் ஸத்கார்யவாதிகளாகத் தடையில்லை" என்றால், இங்குச் சிறிது ஆராய்வாம்.- காரணமான ப்ருஹ்மம் அதிஷ்டானமென்றும், கார்யம் அந்த ப்ருஹ்மத்தில் கற்பிக்கப்பட்ட அத்யாஸம் என்றும் கருதுகின்றனர்.

இதனால் காரணத்தில் கார்யம் கற்பிதம் என்றேற்படுகிறது. கற்பனைக்கிடமான அதிஷ்டானம் எப்பொழுதுமுள்ளது. அத்யாஸமோ ஓர்சமயத்தில் தோஷத்தாற் கற்பிதமாயிருக்கிறது. இவ்வாறிருக்கும்பக்ஷத்தில் ஸத்கார்யவாதம் எவ்வாறு பொருந்தும்.

"அதிஷ்டானமாகிய ஸத்தாயுள்ள காரணமே அத்யாஸமாகிய காரியமாகத்தோற்றுவதால் ஸத்கார்யமாகத்தட்டில்லை" என்றால், கார்யமென்று பதமிருக்க அதை அத்யாஸம் என்னும் அர்த்தத்திற் கொண்டுபோவது சேராது. கொண்டு போனாலும், ஸத்தே கார்யம் என்னும் வாதம், ஸத்காரியவாதம் என்பதைவிட்டு, ஸத்தே கார்யமெனத் தோற்றும் என்று செய்யும்வாதம் ஸத்காரியவாதம் என்று பொருள் சொல்வது ஒருவகையாலும் பொருந்தாது; அதற்கு ஸத்கார்யாரோபவாதம் என்று பெயரிடவேண்டும்.

அன்றியும், நிரதிஷ்டானப்ருஹ்மவாதிகளான பௌத்தர்கள் ஆரோபவாதிகளேயாய், அதிஷ்டான ஸத்தையை அங்கீகரித்திலராதலால் ஸத்கார்ய வாதிகளாக மாட்டாராயினும் அவர்கள் கார்யம் அஸத்து என்று சொல்லும் வாதத்திற்குநேரே மறுதலையான ஸத்காரியவாதத்தை அங்கீகரித்திலராதலால் வைசேஷிகர்களும், பௌத்தர்களும் கைக்கொண்ட அஸத்காரியவாதத்தை நேராக நிரஸித்து ஸத்காரியவாதத்தை நிலை நிறுத்தும் இப்ரகரணத்திலுள்ள சுருதிக்கு இவர்கள் சொல்லும் அத்யாஸவாதம் எவ்வகையாலும் சேராதிருக்கிறது.

ஆகவே, பரிணாமவாதத்திற்கு வேதாந்த வாக்கியங்களின் ஆநுகூல்யமிருப்பதுபோல் பிறர்கூறும் அத்தியாஸவாதமாகிய விவர்த்த வாதத்திற்கு ஆநுகூல்யமில்லையென்பது ஸ்பஷ்டமாயிற்று.

(தொடரும்)

ஸ்ரீ:

தெய்வவணக்கம்.

தெய்வமாவது:-ஹேயங்களுக்கு (அல்பங்களுக்கு) எதிர்த்தட்டாய் ஜ்ஞாநசக்தியாதி குணங்களோடு விளங்குகின்ற ஸர்வேசுவரனும். வணக்கமாவது:-பிறவிப்பிணியாகிய துன்பமற்று நிரதிசயாநந்த வாழ்வை யடைவதற்கு மனமொழி மெய்களால் வணங்குவதாம். இது *ஆசிஸ் (வாழ்த்து) †நமஸ்காரம் (வணக்கம்) §வஸ்துநிர்த்தேசம் (வரும்பொருளுரைத்தல்) என்று மூன்று வகைப்படும். இந்த வணக்கம் எவரிடத்திலிருக்கின்றதோ அவரே நல்லவாழ்வை அடை

---

* ஆஸ்ஸாவது:-

"அடியோமோடும்நின்னோடும்பிரிவின்றியாயிரம்பல்லாண்டு
வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையும்சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே"

என்று வாழ்த்திக் கூறுவதாம்.

† நமஸ்காரமாவது:-

"யாதானுமோராக்கையில்புக்கங்காப்புண்டுமாப்பவிழ்ந்தும்
மூதாவியில்தடுமாறுமுயிர்முன்னமேயதனால்
யாதானும்பற்றநீங்கும்விரதத்தைநல்வீடுசெய்யும்
மாதாவினைப்பிதுவைத்திருமாலைவணங்குவனே"

என்று வணங்குவதாம்.

§ வஸ்துநிர்த்தேசமாவது:-

"நன்கோதுநால்வேதத்துள்ளான்நறவிரியும்
பொங்கோதருவிப்புனல்வண்ணன்—சங்கோதப்
பாற்கடலான்பாம்பணையின்மேலான்பயின்றுரைப்பான்
நூற்கடலான்நுண்ணறிவினான்."

என்று வஸ்துவின் இயல்பெடுத்துரைத்தலாம்.

வார். அஃதில்லாதார் நல்வாழ்வடையமாட்டார்களென்று சாஸ்திரங்கள் உடன்பாட்டுமுகத்தாலும், எதிர்மறைமுகத்தாலும் சொல்லிச் செல்கின்றன. தத்வ தரிசியாயுள்ள நம்மாழ்வாரும் தாம் கண்ட நன்மையைப் பிறருக்கு உபதேசிக்கவந்த இடத்தில் "கழிமின் தொண்டர்கள் கழித்துத், தொழுமின்னவனைத் தொழுதால், வழி நின்ற வல்வினை மாள்வித்து, அழிவின்றி யாக்கந் தருமே" என்று தெய்வவணக்கத்தை உபதேசித்து, அதற்குப் பிறவிப்பிணி ஒழிதலும், நிரதிசயானந்தவாழ்வடைதலும் பிரயோஜனமாக அருளிச் செய்தார். இதனால் உஜ்ஜீவிக்க விரும்புவார்கட்கு இஃதோர் சிறந்த உபாயமாயிருக்குமென்பது பெறப்பட்டது.

இனித் தெய்வ வழிபாடுடையாரின் முறை உரைக்கப்படும். ஸர்வேசுவரன்,

"பரந்ததண்பரவையுள்நீர்தொறும்பரந்துளன்
பரந்தவண்டமிதெனநிலவிசும்பொழிவறக்
கரந்தசில்லிடந்தொறுமிடந்திகழ்பொருடொறும்
கரந்தெங்கும்பரந்துளனிவையுண்டகரனே"

என்றும்,

"......................—வேறொருவர்
இல்லாமைநின்றானையெப்பொருட்குஞ்
சொல்லானைச்சொன்னேன்தொகுத்து"

என்றும் சொல்லியபடி எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் ஒரு நீக்கமற நிறைந்து விளங்கும் பரிபூரணவஸ்துவாய், எல்லாச் சொல்லிற்கும் பொருளாய் விளங்குகின்றான். தத்வ தர்சிகளாயுள்ள பெரியோர்கள் இவ்வாறு விளங்குகின்ற ஸர்வேசுவரனுடைய இயல்பை உள்ளபடி அறிந்து தியானிப்பார்கள். இந்தத் தியானமானது அவர்களுடைய உள்ளத்தில் ஊற்றிருக்கும். ஆகையால் அவர்கள் ஸர்வேசுவரனை விட்டுப் பிரிந்ததாகத் தங்களைக் கருதுவதில்லை. இது நிற்க. அவர்கள் எப்பொருளைக் கண்டாலும் அவையெல்லாம் பகவத் ஸ்வரூபங்களென்றே கருதுவார்கள். அவர்கள் திருஷ்டிக்கு மரம், பக்ஷி, மிருகம், மனிதன் என்று ஒன்றிற்கொன்று விரோதமுடைய வெளித்தோற்ற வடிவு விளங்கமாட்டாது. இந்த வெளித்தோற்ற வடிவங்களில் நிறைந்துவிளங்குகின்ற பரமாத்மாவே அவர்கள் திருஷ்டிக்குப் புலனாகும். வேறுபாடு தோற்றுவதெல்லாம் அஜ்ஞா

நங்களில் மண்டித் திரிகிற நெஞ்சு படைத்தவர்களுக்கேயாம். கண்ணிற்குத் தூரதிருஷ்டிக்கண்ணுடி யணிந்துகொண்டால், தூரத்திலுள்ள பொருள்களெல்லாந் தோற்றும். அதை யணிந்துகொள்ளாத கண்ணிற்குத் தூரத்திலுள்ள பொருள்கள் தோற்றமாட்டா. தூரத்திலுள்ள பொருள்கள் தோற்றுவதற்கும், தோற்றுமைக்கும் கண்ணுடி யணிந்து கொண்டமையும், அணிந்து கொள்ளாமையுங் காரணமாவனபோல எல்லாம் பகவத் ஸ்வரூபமாக அறிவதற்கும், அறியாததற்கும் அவரவருடைய நெஞ்சே காரணமாகும். தத்வதரிசிகளின் திருஷ்டி, பகவதநுபவாநந்தத்தில் ஆழ்ந்திருக்குமது. பகவான் ஆனந்தகுணமுடையவன். அவன்விஷயமான தியானமும் ஆனந்தரூபமாயிருக்கும். ஆதலால் அவர்கள் ஹ்ருதயம் அவ்வாநந்தத்தில் ஆழ்ந்து தங்களை மறக்கச்செய்யும். தங்களை மறக்கவே பிறவற்றை மறப்பார்களென்பது சொல்லாமலே கிடைக்கும். இதற்கு உதாரணமாக தத்வதரிசிகளின் வாக்யங்கள் எடுத்துரைக்கலாகும்.

பக்திநிஷ்டரில் தலைநின்றவராகிய ப்ரகலாதாழ்வான் பகவத் தியானத்தால் தன்னைமறந்து தன்னை அவனுகப்பாவித்து "மத்தஸ் ஸர்வ மஹம் ஸர்வம்" (எல்லா மென்னுடையன நானே எல்லாமாகின்றேன்) என்றருளிச்செய்தார். இவ்வாறே ஆழ்வாரும்,

"கடல்ஞாலஞ் செய்தேனும் யானேயென்னும்
கடல்ஞால மாவேனும் யானேயென்னும்
கடல்ஞாலங் கொண்டேனும் யானேயென்னும்
கடல்ஞாலங் கீண்டேனும் யானேயென்னும்
கடல்ஞால முண்டேனும் யானேயென்னும்
கடல்ஞாலத் தீசன்வந்தேறக் கொலோ
கடல்ஞாலத் தீர்க்கிவையென் சொல்லுகேன்
கடல்ஞாலத் தென்மகள் கற்கின்றவே"

என்று தாய்பேசுவதாகவைத்து அருளிச்செய்தார்.

இதன் கருத்தாவது:— ஸர்வேசுவரன் என் மகளை வந்து ஆவேசித்தானுதலால், ஸர்வேசுவரன் செய்த செயலெல்லாம் தான் செய்ததாகச் சொல்லுகிறுளென்பதாம். நம்பிள்ளை ஈட்டிலும் "அவனுகப்பாவித்தால், பின்னையவன் சொல்லும்வார்த்தை சொல்லலாயிருக்குமிறே" என்று அருளிச்செய்தார்.

இன்னும் ஆராய்ந்தால்,

"......................யாவராய்
நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோராதார்
கற்கின்றதெல்லாங் கடை"

என்றும்,

"நன்றென்றுந்தீதென்றும்நானென்றுந்தானென்றும்
அன்றென்றுமாமென்றுமாகாதே—நின்றநிலை
தானதாந்தத்துவமாம்சம்பருத்தார்யாக்கைக்குப்
போனவாதேடும்பொருள்"

என்றும், உரைத்தபடி பேதபுத்தி ஒழிந்துநின்றபின்பே உண்மையுணர்வுண்டாகுமென்பது விளங்கும்.

"உண்டியேயுடையேயெனவுகந்தோடுமிம்
மண்டலம்..........."

என்றும்,

"தாயேதந்தையென்றுந்தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தேன்..........."

என்றும்,

"பெண்டிரால்சுகங்களுய்ப்பான்பெரியதோரிடும்பைபூண்டு
உண்டிராக்கிடக்கும்போதுஉடலுக்கேகரைந்துநைந்து"

என்றும் அருளிச்செய்தபடி தேகம் வேறு ஆத்மாவேறு என்ற அறிவின்றித் தேகத்தைப் போஷிப்பதே புருஷார்த்தமென நினைத்து, இதரவிஷயங்களில் மண்டித்திரிகிற சம்சாரிகளுக்கு இந்த உண்மையறிவுண்டாவது அரிதாயிருக்கும். அவர்கட்கும் பேதபுத்தியை ஒழித்துப் பகவதநுபவத்தை உண்டுபண்ணி வைப்பதற்காக ஸர்வேசுவரன் ஜகத்வடிவாக இருக்கிறுனென்று காட்டப்படும். இதனல் அவர்களுடைய பேதபுத்தி ஒழியும். இது விஷயம் கீழ்க் குறிப்பிடும் வாலாற்றுலும் அறியலாம்.

அர்ஜுனன், கண்ணபிரானைத் தனக்குச் சாரதியாகக்கொண்டு துர்யோதனாதிகளோடு யுத்தஞ் செய்கின்றகாலத்தில் "பகைவர்களாய் வந்திருக்கின்றவர்கள் குருக்களாகவும், பந்துக்களாகவுமிருக்கின்றார்கள். என்ன கார்யஞ்செய்தோம்; இவர்களைக்கொன்று நாம் ராஜ்யமாள்வதிருக்கட்டும்.', என்று ஆயுதமெடுப்பதொழித்து நின்றான்.

அப்பொழுது கண்ணபிரான், "இவன் தேகம்வேறு ஆத்மாவேறு என்ற அறிவின்றி இவ்வாறு சொல்லுவதற்கு ஆரம்பித்துவிட்டான். இவனுக்குள்ள மயக்கத்தைப் போக்கவேண்டும்" என்று கருதி அர்ஜுனனைப்பார்த்து ஆத்மா, இப்பொழுதுமிருக்கின்றான்; முற்காலத்திலு மிருந்தான்; இனி வருகின்ற காலத்திலு மிருக்கப்போகிறான்; ஆதலால் இவன் நித்யன்; தேகத்திற்குண்டாகின்ற பால்யம், யௌவனம், கிழத்தனம், மரணம் என்ற நிலைகளெல்லாம் இவனுக்கில்லை; நல்ல ஸ்வபாவத்தை யுடையவன்; பிறப்பு இறப்பில்லாதவன்; மனிதன் கந்தை வஸ்திரத்தை நீக்கிவிட்டு நல்ல வஸ்திரத்தைக் கொள்வதுபோல இந்த ஆத்மாவும் பழமையான சரீரத்தைவிட்டு வேறு புதிய சரீரத்தைத் தேடிக்கொள்ளும் திறமை யுடையவன் என்று தேகம் வேறு, ஆத்மா வேறு என விவரித்துக் காட்டினான், அதன்பின்பும் இவன் ஆத்மாபிமானங்கொண்டு அஹங்கரித்துவிடாதிருக்க முன் சொல்லப்பட்ட தேக ஆத்மாக்கள் எனக்குச் சரீரமாயிருக்கின்றன; எல்லாருடைய ஹ்ருதயத்திலுமிருந்து நானே எல்லாக் கார்யங்களையுஞ் செய்விக்கிறேன்; என்னைவிட்டு எல்லா வஸ்துக்களும் நிலைபெறுதாதலால் நானே எல்லாமுமாயிருக்கின்றேன் என்று அருளினான்.

இந்த நிலைமையில் அர்ஜுனன் "இவன் எல்லாக் காரியங்களையும் நானே செய்விக்கின்றேன்; எல்லாம் நானே யாகின்றேன்" என்று சொல்லுகின்றானே! நம் கண்ணிற்கு அப்படித் தோன்றவில்லையே என்று கருதினான். அப்பொழுது கண்ணபிரான் இவனுக்குத் திவ்ய ஸக்ஷுஸை (ஞானக்கண்ணை)க் கொடுத்துத் தான் ஜகத் வடிவாய் நிற்கின்ற நிலையைக் காட்டினான். இவன் அதைக்கண்டு கண்ணபிரானே! உன்னிடத்தில் நான்முகனையும், சிவனையும், தேவர்களையும், ருஷிகளையும், மற்றுமுள்ள ஜங்கம ஸ்தாவர வஸ்துக்கள் எல்லாவற்றையும் பார்க்கிறேன் என்று கூறினான். இது நிற்க,

கண்ணபிரான், பஞ்சபாண்டவர்க்காகத் தூது எழுந்தருளினான். இது விஷயம் கேள்வியுற்ற துர்யோதனன், தன் தந்தை தம்பிமார், கர்ணன், சகுனி, வேறு பலமந்திரிகள் முதலானோரை அழைத்து ஒரு சபை கூட்டினான். அப்பொழுது துர்யோதனன் அவர்களைநோக்கி பஞ்பாண்டவர்க்கு அரசுரிமை வாங்கிக்கொடுப்பதற்காகக் கண்ணன் தூதனாக வருகின்றான்; இதற்கென்செய்வது என்று கேட்டான்.

அது பொழுது இவன் தந்தையாகிய கண்ணிலான் மைந்த! ஒரு புலியானது வலையில் அகப்பட்டுக்கொண்டால் வேடர்கள் விடுவார்களா? இப்பொழுது தூதனாக வருகின்ற கண்ணனை இன்றைப் பொழுது நீங்குவதற்குள்ளாக நம் சேனையோடு சென்று வளைத்துக் கொன்றுவிடுவதே தக்ககாரியம் என்றான். நல்லறிவுடைய விகர்ணன், தூதரைக்கொல்லுதல் பாபச்செயலாகும். அது நிற்க, உங்கள் சூழ்ச்சிக்கு அவன் அகப்படமாட்டானென்றான். துச்சாஸநன், கண்ணனிருக்கின்ற விதுரன் வீட்டை நெருப்பிற்கிரையாக்கி இருவரையும் கொல்லுதல் நலமென்றான். கர்ணன் கண்ணனை என் அம்பிற்கிரையாக்குவேன், இப்பொழுதே சேனையோடெழுமின் என்றான். இந்நிலைமையில் சகுனியானவன்,

"கொல்லுவதியற்கையன்றுகுழிபறித்தாக்கரோடு
மல்லவரையிருத்திமேலோராசனம்வகுத்துநாளை
எல்லிடையழைத்துவீழ்த்தியிகலுடன்விலங்குபூட்டித்
தொல்லருஞ்சிறையில்வைத்தல்தூதருக்குரிமையென்றான்"

இது கேட்ட துர்யோதனன் இதுவே தக்க உபாயமாகுமென்றெண்ணிப் பூமியிற் பெருங்குழிபறித்து அதில் அநேகமாயிரம் படைவீரர்களைவைத்து அதன்மேல்,

"பெரும்பிலவறையைவேயின்பிளப்பினுனிரைத்துமூடி
அரும்பெறல்மணிகளாலோராசனமதன்மேலாகிச்
சுரும்பிமிர்மாலைதூக்கித்தொழிலுடைவிதானமேற்றி
வரம்பிலாவென்றிவேலான்மாறிலாவண்ணஞ்செய்தான்"

அதன்பிறகு ஒரு தூதனைக் கண்ணபிரானை அழைத்து வரும்படி ஏவினான். அவன் சென்றழைக்க கண்ணபிரான் விரைவில் துர்யோதனன் ஸபையை அடைந்தனர். துர்யோதனன் மிக அன்போடு கண்ணபிரானைப் பொய்யாசனத்தில் அமரும்படி சொன்னான். கண்ணபிரான் இவன் நம்மியல்பறியாது வஞ்சனைசெய்தவாறென்னே! என நகைத்து அப்பொய்யாசனத்தே வீற்றிருந்தனன். அப்பொழுது,

"இறைவனெழிற்கதிர்மணிகளழுத்தியதவிசினிருத்தலுமே
நெறுநெறெனக்கொடுநில்வறையிற்புகநெடியவனப்பொழுதே
மறவியெனத்தகுநிருபனியற்றியவிரகைமனத்துணரா
முறுகுசினத்துடனடியதலத்துறமுடிககனத்துறவே"

என்றபடி விராட் ஸ்வரூபங்கொண்டெழுந்து குழியிலிருந்த படை வீரர்களையெல்லா மழித்துநின்றான். இந்த நிலைமையில்

"மாயிருஞாலமெலாம்வெளியாயொளிர்மரகதசோபையுறப்
போயிருபாலும்வளைந்துவளைந்தெதிர்பொருமுனைவெம்படையோடு
ஆயிரமாயிரமங்கைபுறப்படவண்டருமாதவரும்
பாயிரநான்மறைபாடிவியந்துபணிந்துபுகழ்ந்தனரே"

"கங்கைமகன்கதிரோன்மகனம்பிகைகாதன்மகன்றனயர்
அங்கவையின்கணிருந்தநராதிபரடையவெழுந்தடைவே
செங்கைகுவித்தசிரத்தினராயுணர்வொன்றியசிந்தையராய்
எங்கள்பிழைப்பினையின்றுபொறுத்தருளென்றுபணிந்தனரே"

இவ்வாறு கண்ணபிரானைத் தேவர் முதலியோர்களும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். பீஷ்மாசார்யர், கர்ணன் முதலிய ஸபையிலுள்ளோர்களும் கைகூப்பிநின்று நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென வேண்டினார்கள். அதன்பிறகு முன்னுள்ள வடிவத்தோடு நின்றான்.

இந்த இரண்டு வரலாற்றாலும், ஸர்வேசுவரனிடத்தில் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன என்பதும், அவனே எங்கும் நிறைந்து விளங்குகின்றானென்பதும், அறிவில்லாதவர்களும் அறியும்வண்ணம் அவன் தானே ஜகத்வடிவாய் நிற்கின்ற நிலையைக் காட்டினானென்பது பெறப்பட்டன.

இங்ஙனம் ஸர்வேச்வரன் விராட்ஸ்வரூபனாய் நிற்கும் நிலையைக் குறித்து பாரதம்பாடிய பெருந்தேவனார் ஒரு பாடல் கூறியிருக்கின்றார். அது வருமாறு.-

"மாநிலஞ்சேவடியாகத்தூநீர்
வளைநரல்பௌவமுடுக்கையாக
விசும்புமெய்யாகத்திசைகையாக
பசுங்கதிர்மதியமொடுசுடர்கண்ணாக
வியன்றவெல்லாம்பயின்றகத்தடக்கிய
வேதமுதல்வனென்ப
தீதறவிளங்கியதிகிரியோனே"

என்பதாம்.

இதனால், ஸர்வேசுவரனுக்கு அபரமாயுள்ள பிருதிவி (மண்) தத்வரூபமான நிலத்தைத் திருவடியாகவும், அதன்மேல் அப் (ஜல) தத்வரூபமான கடலை வஸ்திரமாகவும், அதன்மேல் ஆகாச தத்வ ரூபமான விசும்பை மெய்யாகவும், அதன்மேல் திக்தத்வமான திசைகளைக் கைகளாகவும், அதன்மேல் திவ்ய தேஜோ தத்வ ரூபமான சந்திர ஸூர்யர்களைக் கண்களாகவும், இவ்வாறே மற்றுமுள்ள தத்வங்களும் ஸர்வ வ்யாபகமாய் விளங்காநின்ற திவ்பமங்கள விக்ரஹத்தின் விசுவாகாராவயவங்களாகவும் விளங்காநிற்கும் என்று குறிக்கப்பட்டிருப்பதும் அறியத்தக்கது இன்னும் இந்தப் பாட்டின் விரிவுரை பின் தெளிவாய் எடுத்துரைக்கப்படும்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமை.

[18-ம் பக்கத் தொடர்ச்சி]

முன் பத்துவகை வைஷ்ணவர்களுண்டு. அவர்களில் ஒருவரைக்காட்டிலும் ஒருவர் உயர்ந்த நிலையுடையவராவாரென்று எடுத்துக் காட்டியதற்கு இங்கு ப்ரமாணங் காட்டலாகும்.
(அத்வேஷன்)

"ஹரிம்லோக நியந்தாரம் வைஷ்ணவாங் லோக பாவநாங்
த்ருஷ்வோ நத்வேஷ்டியோர் மத்யஸ் ஸோத்வேஷ: பரிகீர்த்தித:"

இதன்பொருள் எல்லாவற்றையும் அடக்கியாள வல்லவனும், ஸர்வ பாபங்களையும் போக்க வல்லவனுமான எம்பெருமானையும், லோகத்திற்குச் சுத்தியைச் செய்கின்ற அவனடியார்களையும் கண்டு த்வேஷங் கொள்ளாதவன் என்பதாம். இவ்வுலகில் ஒருவருடைய பெருமையைக் கண்டு பொறுமைப்படாதிருப்பது அரிது. அதிலும் எம்பெருமான் விஷயத்திலும், அவனடியார் விஷயத்திலும் அது உண்டாகாதிருப்பது அரிதிலுமரிது. த்வேஷமுண்டாவதற்கு வேறு காரணமின்றிக் காண்டல் மாத்திரமே காரணம் என்பார் த்ருஷ்வோ

(பார்த்து) என்றார். கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு மிகவும் ரஹஸ்ய விஷயத்தை உபதேசிக்கின்ற காலத்தில் "நீ என்னையும், என்னடியார்களையுங் கண்டு பொறாமைப்படா திருந்தாய் ஆகையால் உனக்கு ரஹஸ்யங்களுக்கும் ரஹஸ்யமா யிருக்கின்ற விஷயத்தைச் சொல்லுகிறேன்" என்று அருளிச்செய்தார். இதை ஆராய்ந்து பார்க்கும்போது த்வேஷங் கொள்ளாதிருப்பதே அருமை என்பது தோற்றுகிறது. இதுபற்றியே த்வேஷமில்லாதவனையும் வைஷ்ணவனாகப் பாராட்டப்பட்டது.

(அநுகூலன்)

"வாஸுதே வோத்ஸவாம்ச்சைவ மஹாபாகதாநபி
அநுவர்த்தே தயோ நித்யம் ஸோநுகூல உதாஹ்ருத:"

இதன்பொருள் எம்பெருமானுடைய உத்ஸவங்களைச் சேவிப்பதும், அவனடியார்களுக்கு நல்லவனா யிருத்தலுமுடையவன் அநுகூலனென்று கருதப்படுவான் என்பதாம்.

(நாமதாரி)

"ஸ்மிருத்யுச்சாரண மாத்ரேண ஸர்வபாப ப்ரநாசநம்
விஷ்ணுநாமதர: புண்ய: நாமதாரீ ஸ உச்யதே"

இதன்பொருள் நினைத்த மாத்திரத்தாலும், சொன்னமாத்திரத்தாலும் எல்லாப் பாபங்களையும் போக்கவல்ல எம்பெருமானுடைய திருநாமங்களைத் தனக்குப் பெயராகக் கொண்டவன் நாமதாரியென்று சொல்லப்படுவான் என்பதாம். பகவந்நாமம் மிகவும் பெருமையுடைய தென்பதை அஜாமீளோபாக்யானத்தால் அறியலாம். இவ்வாறு பெருமையுடைய பகவந் நாமத்தை அடிக்கடி சொல்லவேண்டுமென்கிற கருத்தால் தன் குழந்தைகளுக்கு வைப்பவனும் நாமதாரியாவனென்று தோற்றுகிறது. பகவந் நாமத்தைக் குழந்தைகளுக்கு வைக்கவேண்டுமென்ற விஷயம் பெரியாழ்வார், சம்சாரிகளைக் குறித்து "நீங்கள் சகல பாபங்களைப் போக்கவல்ல எம்பெருமானுடைய திருநாமத்தை உங்கள் பிள்ளைகட்கிட்டு வாயார வாழ்த்திப் பிரீதியுடையராகக் கடவீர்கள்" என்று உபதேசிக்கின்ற "காசுங்கறையுடை" என்ற திருமொழியில் அருளிச்செய்திருக்கிறார்.

(சக்ராங்கி)

"ச்ருதிஸ்மிருதி புராணேஷு விஹிதம் சக்ர தாரணம்
யோபிபர்தி ஹரேச் சக்ரம் சக்ர தாரீ ஸ உச்யதே"

இதன் பொருள் வேதத்திலும் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களிலும் எம்பெருமானுக்கு அஸாதாரணமாய் (சிறப்பாய்) உள்ள சங்க சக்ரங்களைத் தரிக்கும் முறை விதிக்கப்பட்டது. அப்படிப்பட்ட சங்க சக்ரங்களைத் தரித்தவன் சக்ரதாரி என்று கருதப்படுவான் என்பதாம்.

(மந்த்ரபாடி)

"அஷ்டாக்ஷரஸ்ய மந்த்ரஸ்ய ஸ்மரணாத் முக்திதோ ஹரி:
இதிமத்வா ஸ்மரேந் நித்யம் மந்த்ரபாடீ ஸ உச்யதே"

இதன் பொருள் "அவன் பெயர் எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே" என்றபடி எட்டெழுத்தாகிய திருமந்த்ரத்தை நினைக்கின்றவர்களின் பாபங்களை எம்பெருமான் போக்கி முக்தி தந்தருளுகிறான்; என்பதை உட்கொண்டு அம் மந்த்ரத்தை நினைப்பவன் மந்த்ரபாடி என்று சொல்லப்படுவான் என்பதாம்.

(வைஷ்ணவன்)

"தேவதாந்த்ரவந் நித்யம் சப்தாதீநபி குத்ஸயந்
விஷ்ணு ப்ராப்தி பலாகாம்க்ஷீ பக்த்யுபாயோஹி வைஷ்ணவ:"

இதன் பொருள் தேவதாந்த்ரங்களையும், இதர விஷயங்களையும் அருவறுத்து, எம்பெருமானையே பிரயோஜனமாகக் கருதிப் பக்தியை உபாயமாகக் கொண்டவன் வைஷ்ணவனெனப்படுவான் என்பதாம்.

(ஸ்ரீவைஷ்ணவன்)

"பாஹ்யார்த்த நிரதாந் ஸர்வாந் ஸம்யக் த்யக்த்வா ஸதாசுசி:
பக்திமாந் புண்டரீகாக்ஷே ஸ்ரீவைஷ்ணவ உதாஹ்ருத:"

இதன்பொருள் இதர விஷயங்களை விட்டுப் பரிசுத்தனாய், விஷயாந்தரங்களில் விரும்பித் திரிகின்றவர்களைக் கண்டு அருவறுத்து அவர்கள் ஸம்பந்தத்தை அறவே ஒழித்திருக்குமவன் ஸ்ரீவைஷ்ணவனெனப்படுவான் என்பதாம்.

(ப்ரபந்நன்)

"சப்தாதி விஷயாம்ச்சைவ தேஹோபாதிக ஸம்பவாந்
த்யக்வா ஹரிம்பஜேத்யஸ்து ஸப்ரபந்ந உதாஹ்ருத:"

இதன் பொருள் சரீர ஸம்பந்தமே காரணமாக வரக்கூடிய சப்தாதி விஷயங்களைவிட்டு எம்பெருமானை உபாஸிப்பவன் ப்ரபந்நனென்று சொல்லப்படுவான் என்பதாம்.

(ஏகாந்தி)

"ஏகாந்தீது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை:
பக்த்யுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தௌ கிருஷ்ணைக ஸாதந:"

இதன் பொருள் தேவதாந்தரங்களோடு, சப்தாதி விஷயங்களோடு, உபாயபக்தியும் விடக்கூடியவற்றில் சமமெனக் கருதி எம்பெருமானையே அடைகின்றவன் ஏகாந்தியாவான் என்பதாம். இந்த அதிகாரி எம்பெருமானையே உபாயமாக அடைந்தவனாதலால் இவன் அவன் விஷயமான உபாய பக்தியும் விடத்தக்க இதர விஷயங்களோடு இதுவும் ஒன்றும் என்று கருதுவான். ஆக இந்த அதிகாரியின் புத்தியால் உபாய பக்தியும் ஒழிக்கத்தக்கதென்பது பெறப்பட்டது.

(பரமைகாந்தி)

"தேவதாந்த்ர சப்தாதி பக்தி க்ருஷ்ணைக்ய ஹேதுஷு
ஸாம்யக்ருத் பரமைகாந்தீ ஹரௌ ஸ்வாமீதி புத்திமாந்"

இதன் பொருள், தேவதாந்தரங்களும், சப்தாதி விஷயங்களும், பக்தி யோகமும், எம்பெருமானைத் தானாகப்பற்றும் பற்றாகிய ஸ்வகதஸ்வீகாரமும் விடத்தக்கவைகளாம் என்று கருதி, சம்சாரக் கட்டை அறுக்கவல்ல எம்பெருமானே ஸ்வாமியாவான் என்ற உறுதியான எண்ணமுடையவன் பரமைகாந்தியாவான் என்பதாம்.

ஏகாந்திக்கு ஈசுவர விஷயமான பக்தியோகமும் அவன் புத்தியினால், விடத்தக்க விஷயமானதுபோல இந்தப் பரமைகாந்திக்கு எம்பெருமானை ஸ்வதந்தரமாகப்பற்றுவதும் இவன்புத்தியினால்விடத்தக்கவிஷயமாயிற்று ஆதலால் இவன் அவன்கைபார்த்திருக்கும்பாகத

ஸ்வீகாரநிஷ்டன் என்பது விளங்கும். இவ்வர்த்தம், "ஹரிரேள ஸ்வாமீதிபுத்திமாந்" என்ற சுலோக பதங்களில் அடங்கிக் கிடக்கிறது. அஃதாவது:- ஹரி-ஸம்ஸாரக்கட்டைப் போக்குகிறவன். ஸ்வாமி-ஸ்வத்தையுடையவன். அவன் (ஈசுவரன்) ஸம்ஸார பந்தத்தைப் போக்கவல்லனும்போது இவன் (சேதனன்) ஸம்ஸார பந்தத்தைப் போக்கிக்கொள்ள யத்தனிக்கவேண்டா. அவன் ஸ்வத்தையுடையவனும்போது இவன் ஸ்வாமியை அடைய யத்தனிக்கவேண்டா என்பதாம். இந்த அதிகாரிக்கு எம்பெருமானையடைய ஆசையுண்டேயாகிலும் இவன் அவன் கைபார்த்திருக்குமவனுதலால் அவன் செய்தபோது செய்கிறுனென்று அவ்வாசை அழுந்திக்கிடக்கும். இது, ஜனகராஜன்திருமகளாகிய சீதாபிராட்டியார் அசோகவனத்தில் எழுந்தருளியிருக்கும்போது, தூதுவிடுதல், திருவடியோடு (அநுமானுடன்) பின்தொடர்ந்து செல்லுதல் செய்யாது தன் ஆர்த்தியை அடக்கிக்கொண்டிருந்தாள் என்பதனு லறியலாம். இன்னும் இந்த பரமைகாந்தியின் அத்யவஸாயமாகிய புத்தி விசேஷத்தின் வேறுபாடு உரைக்கலாகும்.

(தொடரும்.)

காரப்பங்காடு,
ஸ்ரீ. உ., வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் தமையனுர் குமாரரும்,
அந்தே வாசியுமான வேங்கடாசார்யர்,
சேரங்குளம்.

ஸ்ரீ:

நூல்.

நூலாவது:- இதைச் செய், இதைச் செய்யாதே என்று சொல்லுகிற பகவதாஜ்ஞாரூபமான சாஸ்திரமாம். நூல்போன்றிருப்பதால் நூலென்று வழங்கலாயிற்று என்பர். அஃதாவது:- கைத்தொழில் வல்ல பெண் பஞ்சின் நுனிகளால் தன் தொழில் திறம் தோன்ற ஒரிழைப்படுத்துவதுபோல கற்று வல்ல புலவனால் விரிந்து பரந்த சொற்களால் சுன்னறிவு நலந்தோன்ற ப்ரபந்தமாக நூற்கப்படுவதாம்.

அன்றித் தச்சனிடத்திலுள்ள எற்று நூலானது மரத்தின் கோணலைப் போக்கிச் செம்மைப் படுத்துவதுபோல மனக்கோணலைப் போக்கிச் செம்மைப்படுத்துவதால் நூலென்று பெயர் பெற்றதென்றுஞ் சொல்லலாம்.

இந்நூல், முதல்நூல், வழி நூல், சார்புநூலென்று மூன்று வகைப்படும். இவற்றுள் முதல் நூலாவது:-ஸர்வேசுவரனும். அவனருள் பெற்ற பெரியோர்களும் அருளியதாம். வழிநூலும், சார்புநூலும் முதல்நூலை ஆதாரமாகக்கொண்டு செய்யப்படுவனவாம். வழிநூலானது, பெரும்பான்மை முதல்நூலை ஒத்திருக்கும். சார்புநூலானது, சிறுபான்மை முதல்நூலை ஒத்திருக்கும். முதல்நூலில் அறிதற்கரிதாயிருக்கின்ற பொருள்களைத் தெளிவாக அறிவிப்பதற்காகவே வழிநூல், சார்புநூல்கள் தோன்றும். இவற்றால் அறியப்பட்ட பொருளைக்கொண்டு அறிபப்படாத முதல்நூலின் அர்த்த விசேஷங்களை யறிதல் இவற்றின் பிரயோஜனமாம். வேதம், பாஞ்சராத்ரம், முதலியவை முதல்நூல்களாம். ஸ்மிருதி (தர்மசாஸ்திரம்) இதிஹாஸம் (ஸ்ரீராமாயணம் பாரதம்) முதலியவை வழிநூல்களாம். புராணாதிகள் சார்புநூல்களாம். திராவிட வேதத்தில் திருவாய்மொழி முதலியவை முதல்நூல்களாம். ரஹஸ்யாதிகள் வழிநூல்களாம். அஷ்டப்பிரபந்த முதலியவை சார்புநூல்களாம். இதுநிற்க, எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது, தன் கொள்கையை நிலைநிறுத்திப் பிறர்கொள்கையை மறுப்பதாம். அதற்கு இருசமய விளக்கம்போல்வனஉதாரணமாகும், நிற்க,

நூல்கள், அறிவுநூலென்றும், உலகநூலென்றும் இருவகையாகப் பிரித்தெண்ணவும் படும். அவற்றில் அறிவுநூலாவது:-மோக்ஷ சாதனமாயிருப்பது. உலகநூலாவது:-உலக வாழ்க்கைக்குச் சாதனமாயிருப்பது.

"அலகுசால்கற்பினறிவுநூல்கல்லா
துலகநூலோதுவதெல்லாம்"

என்பதனாலும் இவ்விரண்டு பிரிவுகளறியலாகும். இந்த இரண்டு நூல்களில் மோக்ஷ சாதனமாகிய அறிவுநூலே சிறந்ததாம். உலக நூல் தம் பெருமைதோன்ற பிறரிடம் ஆரவாரமாய்ப் பேசிச் செருக்குற்றுத் திரிதற்குச் சாதனமா யிருக்குமேயன்றிப் பிறந்துழல்கின்ற தடுமாற்றத்தைப் போக்குதற்குச் சாதனமாயிராததனால் சிறப்புடையதாகாது. இதுபற்றியே,

"உலக நூலோதுவதெல்லாம்—கல்கல
கூ உந்துணையல்லால்கொண்டுதடுமாற்றம்
போஒந்துணையறிவாரில்"

என்றார். மேலும் ஈட்டில் "§பகவத் வ்யதிரிக்த விஷயங்களைப் பற்றிப் பிறக்கும் ஜ்ஞானமெல்லாம் அஜ்ஞானகல்பம். "தஜ்ஞாநமஜ்ஞாநமதோந்ய துக்தம்" (ஈசுவரவிஷய ஜ்ஞாநமே ஜ்ஞாநமாம் ஒழிந்ததெல்லாம் அஜ்ஞாநமென்று சொல்லப்படும்) "தத்கர்மயந்ந பந்தாய ஸா வித்யா யாவிமுக்தயே, ஆயாஸா யாபரம்கர்ம வித்யாந்யா சில்பனநபுணம்" என்கிறபடியே பகவத் விஷயத்தை ஒழியக் கற்றவையெல்லாம் செருப்புக்குத்தக் கற்றவோபாதி" என்று அருளிச்செய்ததாலும் அறிவுநூலின் பெருமை அறியலாகும்.

இவை ஈசுவர ஸ்தோத்திர ரூபமாயிருக்கும். இந்த அறிவு நூல்களுள்ளும் எது, ஸர்வேசுவரனைப்போல் ஆற்றலுடையதா யிருக்கின்றதோ அதுவே சிறந்த நூலாம். ஸர்வேசுவரனைப்போல் ஆற்றலுடைய நூலென்றது, ஸர்வேசுவரன் ஸாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களைத் தண்டித்தல், தர்மபரிபாலனஞ் செய்தல் என்ற இவற்றைத் தனக்கு இயல்பாகக்கொண்டிருப்பதுபோல இந்த மூன்றியல்பையும் பெற்றிருக்கும் நூலென்றவாறு.

இவ்வாறு சிறப்புடைய நூல் திருவாய்மொழி முதலிய நூல்களாம். இதைக்குறித்து ஆழ்வார் தாமே அருளிச்செய்திருக்கிறார். அது வருமாறு:—

"நண்ணாவசுரர்நலிவெய்தநல்லவமரர்பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும்நன்முனிவரின்பந்தலைச்சிறப்பப்
பண்ணார்பாடலின்கவிகள்யானாய்த்தன்னைத்தான்பாடித்
தென்னாவென்னுமென்னம்மான்திருமாலிருஞ்சோலையானே"

என்பதாம். இதற்கு ஈட்டில், "நண்ணாவசுரர் நலிவெய்த, நல்ல வமரர் பொலிவெய்த, எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்ப வாய்த்துத் திருவாய்மொழிதான் அவதரித்தது. *ஸ்துத்ய

§ பகவத் வ்யதிரிக்தவிஷயம்-ஈசுவரனைக்காட்டிலும் வேறான விஷயம்.

அறிவுநூலெல்லாம், ஸர்வேசுவரனுடைய இயல்பையும், அவன் விஷயமான ஸ்தோத்திரத்தையும் எடுத்துச்சொல்லும். ஆகையால்

*. ஸ்துத்யன்:— ஸ்தோத்திரம் பண்ணப்படுமவன்: ஈசுவரன்.

னுடைய அவதாரம்போலே யாயிற்று †ஸ்துதியினுடைய அவதாரமும் §"பரித்ராணாய" %"அகிலஜகத்பத்மபோதாய" என்னுமாப்போலே. ×ப்ரதிகூல நிரசனத்திற்கு வேறொருதவி தேடவும் வேண்டாதே, அநுகூலர் ரக்ஷணத்திற்கு வேறொன்று தேடவும் வேண்டாதே, ¶அநந்ய ப்ரயோஜனராயிருப்பார்க்கு ஸ்வயம் ப்ரயோஜனமுமாயிருக்குமாய்த்து" என்று பொருளுரைத்து "நண்ணாவசுரர் நலிவெய்த" என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டப்பட்டுள்ளது. அஃதாவது:—

கிருமிகண்ட சோழன் காலத்தின்பின் அவன் மகன் அரசுரிமை பெற்று ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். அப்பொழுது சில மந்திரிகள் அவனை நோக்கி 'உன் தந்தையார் சைவசமயப் பற்றுடையவர்; அச்சமயத்திற்கு உடல், பொருளாவி மூன்றையுங் கொடுத்துதவியவர்; வைஷ்ணவசமயக் களைபெடுத்தவர்; ஆகலால் நீயும் உன் தந்தையார் செயலை மேற்கொண்டு பிறசமயக் களையைப் பறித்துச் சைவநெறி தழைத்தோங்க ராஜ்யபரிபாலனஞ் செய்துவரக் கடவாய்' என்று போதித்தார்கள். இதுகேட்ட அவன் தன் தந்தை செய்த செயலில் திருப்தியில்லாதவனாய் அவனை நிந்தித்தான். அஃதாவது

---

†. ஸ்துதி:— ஈசுவரனை ஸ்தோத்திரஞ்செய்கின்ற நூல்.

§. "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே"

இதன்பொருள் நல்லோர்களைக்காப்பாற்றுவதற்கும், துஷ்டர்களை சிக்ஷிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகங்கள் தோறும் அவதரிக்கிறேன் என்பதாம்.

%. "ததோகில ஜகத்பத்ம போதாயாச்யுதபாநுநா
தேவகீபூர்வ சந்த்யாயா மாவிர்ப்பூதம் மஹாத்மநா"

இதன்பொருள் மஹாத்மாவான கிருஷ்ணனாகிய ஸூர்யன் தேவகியாகிய கிழக்குத்திக்கில் ஜகத்தாகிய தாமரைப் புஷ்பம் மலர உதித்தது என்பதாம்.

×. ப்ரதிகூலநிரசனத்திற்கு:— பகைவரை யழிப்பதற்கு

¶. அநந்யப்ரயோஜனர்:— எம்பெருமானையே பலமாகக் கொண்டவர்.

183

†'ஒரு மதிலை வாங்குங்காட்டில் அத் தர்சனம் குலைந்ததாமோ திருவாய்மொழியென்றும், ஸ்ரீராமாயணம் என்றும் வலியன இரண்டு மஹா ப்ரபந்தங்களுண்டாயிருக்க,' என்று சொன்னான். இதனால், இந்நூல் உகவாதார் நெஞ்சுவருந்தும்படி செய்யவல்ல சீர்மையை யுடையதாயிருக்குமென்பது தெளிவாயிற்று.

இன்னும் இப்பாட்டில் "யானாய்த்தன்னைத் தான்பாடி" என்பதற்கு ஈட்டில், "பிதாவானவன் புத்திரனுக்குப் பசுவை நீர்வார்த்துக் கொடுத்து அவன் பக்கலிலே தான் மீள நீரேற்றுப் பசுவைப் பெறுமாப்போலே சுதனை (மகனை) வார்த்தை கற்பித்து அவன் சொல்லைக் கேட்டு இவனினியனாமாப்போலே. தான்பாடினானாகில் ஸ்ரீகீதையோடொக்கும்போம். நம்பிதிருவழுதிநாடு தாஸர் "அருள்கொண்டாடும்" என்கிறபாட்டிலே "ஸ்ரீகீதையை அப்யஸித்தானொருவன் ஸந்தியாஸதஸ்ஸிலே சென்றால் பலருமாக நாலேகிட என்பர்கள்; திருவாய்மொழிகற்றான் ஒருவிண்ணப்பஞ் செய்வான் சென்றால் ஸர்வேசுவரனகப்படப்புறப்பட்டெதிர்கொண்டு அகமொழித்துக் கொடுத்து அமுதுபடியுமெடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள் என்றாராம். *"பண்டே பரமன்பணித்த" என்று இவரங்கீகரிக்கையாலே ஸ்ரீகீதைதானும் வீறுபெற்றதிறே" என்று ஐதிஹ்யத்துடன் பொருளுரைக்கப்பட்டிருக்கிறது.

---

†ஒருமதிலை வாங்குங்காட்டில் அத்தர்சனங்குலைந்ததாமோ என்றது. மதிலை இடித்தகாரணமாக வைஷ்ணவசமயம் நாசமாய்விடுமோ? விடாதென்றவாறு. இதனால் கிருமிகண்டசோழன் சில்விஷ்ணு ஆலயங்களை இடித்தான் என்று குறிக்கப்படுகிறது. விஷ்ணு ஸமயத்தை ஒழிக்கவேண்டுமானால் அந்த ஸமயத்தைக்குறித்துப் பேசுகின்ற திருவாய்மொழி முதலிய நூல்கள் உலகில் நடையாடாதிருக்கும்படி செய்யவேண்டும். அது செய்யாது ஆலயங்களையிடித்தது அறிவுகெட்ட செயலாகும் என்ற கருத்தால் கிருமிகண்டசோழன் மகன் தன் தந்தையை நிந்தித்தான் என்பது போந்தபொருள்.

*"கண்டேன்கமலமலர்ப்பாதம்காண்டலுமே
விண்டேயொழிந்தவினையாயினவெல்லாந்
தொண்டேசெய்தென்றுந்தொழுதுவழியொழுகப்
பண்டேபரமன்பணித்தபணிவகையே"

இதன்பொருள், கீதையில் சரமச்லோகத்தில் "என்னைச் சரணமடைந்தாரின் அபேக்ஷிதமெல்லாம் நானே செய்வேன்" என்று எம்பெருமான் முன்பேயருளிச்செய்தபடி அவனுடைய அருளால் எல்லா அடிமைத்தொழிலையும் எல்லாக்காலமும் செய்தொழுக அவன் திருவடிமலர்களைக் கண்டேன். கண்டவாறே என்னுடைய எல்லாத்துக்கங்களும் ஒழிந்தன என்பதாம்.

இதனால், நூல்பலவற்றுள்ளும் அறிவு நூல்களே சிறந்தன வென்றும், அவற்றுள்ளும் திருவாய்மொழியே ஸர்வேசுவரனைப் போல் சிறந்துவிளங்கும் இயல்புடையதென்றும் உரைக்கப்பட்டன.

ஸ்ரீ

மதிப்புரை.

தமிழ்ப்பொழில்:—இது கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரால் சென்ற சித்திரைத் திங்கள் தொடங்கி வெளியிடப் பெறுவதாய ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. திரு R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் இதன் ஆசிரியராவர். இது சிறந்த கடிதத்தில் நாற்பதுபக்கங்களளவுள்ள புத்தகமாக நன்றாயச்சிடப்பட்டிருக்கிறது. திருவாளர், L. உலகநாதபிள்ளை யவர்கள், மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் முதலிய தமிழ்ப்புலவர்கள் இதன்வாயிலாகச் சிறந்த கட்டுரைகளெழுதித் தமிழுலகுக்குபகரித்து வருவார்களென்று தோன்றுகிறது. தமிழ் மொழிவரலாறு, தமிழ் நூலாராய்ச்சி, பழந்தமிழ் நூல்வெளியீடு, அரியநூல்களின் தமிழ்மொழிபெயர்ப்பு முதலான பலதுறைகளிலும் தமிழ்மக்களுக்குப் பயிற்சியுண்டாக்குதலே இப்பத்திரிகையின் நோக்கமாகும். இதன் பொருளுரைகள் பிறமொழிவிரவாத தனித்தமிழ் நடையாலியன்றிருப்பது பாராட்டற்குரியதே. தமிழபிமானமுள்ள ஒவ்வொருவரும் தம்மாலியன்றவளவு இதற்குதவி செய்வதோடு, இத்தகைய நன்முயற்சியினைமேற்கொண்டு நடத்த முன்வந்த கரந்தைச் சங்கத்தாருக்கு நன்றிபாராட்டற்கடப்பாடுடையவருமாவர். இதற்கு ஆயுட்சந்தா ரூ 25. மாணவர்க்கு வருஷச்சந்தா ரூ 2—0—0. ஏனையோர்க்கு ரூ 2—8—0. வெளிநாட்டிக்கு ரூ 3—0—0. தனிமலர் அணா 0—4—0. வேண்டுவோர், பத்திராசிரியர் தமிழ்ப்பொழில், கருந்திட்டைக்குடி தஞ்சை என்ற விலாசத்திற் கெழுதிப்பெறுக.

[குறிப்பு:-மனம் ஓடும், உருகும், வாடும், இளகும், மயங்கும், இருளாகும், தெளியும், மருவும், அடைந்திடும் எனக் கூட்டுக. மாடு-பக்கம். சிலம்பு-மலை. கோறி-கொல்வர்யாக, காதுதல்-கொல்லுதல். கண்டகர்-துஷ்டர். காலன்-யமன்]

33. பசையற்ற வுடல்வற்றி வளைவுற்று நடைநெட்டி
பரியக்கை சொரியப்பல் விழலாகிப்
பகலைக்கும் விழிகெட்ட குருடுற்று மிகநெக்க
பழமொத்து நரைகொக்கி னிறமேவி
விசைபெற்று வருபித்த மதுசுற்றி விழுவிக்க
மெலிவுற்று விரல்பற்று தடியோடே
வெளியற்ப மெனும்[1]விர்த்த னெனவெட்கு சனனத்தை
விடுவிக்க வருள்வைப்ப தொருநாளோ
அசைவற்ற நிருதப்பெண் மடிவுற்ற பிரியத்தி
னடல்[2]வச்ர தரன்மற்று முளவானோ
ரளவற்ற மலரிட்டு நிலமுற்று மளவிட்ட
வடிபற்றி விடைபெற்று நெடிதேக
வசையற்று முடிவற்று வினையற்று மதமற்று
வடுவற்று நிகரற்ற முனிராசன்
மதுரித்த மொழிசெப்பி யருளுற்ற பொழுதத்து
மனமொத்த படைபெற்ற பெருமாளே.

[குறிப்பு:-நெட்டி-யாக்கைக்குற்றத்தொன்று. நெட்டிபரிய-நெட்டையுண்டாக. பகலைக்கும்-பகலிலும். நெக்க-நெகிழ்ந்த-கனிந்த.நிருதப்பெண்-தாடகை. வச்ரதான்-இந்திரன். வசை-பழிச்சொல். வடு-குற்றம். முனிராசன்-விசுவாமித்திரன். மதுரித்த-இனிய. படை-ஆயுதம்.]

34. வீதியினின்றுநின்று காமனைவென்றுவென்று
மேல்விழவந்துவந்து விழியாகும்
வேலையெறிந்தெறிந்து காதலறிந்தறிந்து
வேதனைதந்துதந்து குழல்கோதிக்

1. விர்த்த வென. 2. வச்ரகரன்.

கோதையணிந்தணிந்து சாலவசைந்தசைந்து
கூசுதலின்றியின்றி யருகாகிக்
கூடியிருந்திருந்து [1]வேசியர்கொண்டகொண்ட
கோரணிகண்டுகண்டு தளர்வேனோ
போதவளைந்துகொண்ட தாடகைபங்கழிந்து
போயினபின்பு[2]முன்பு நெடிதேகிப்
பூபதியென்றிருந்த மாவலியன்புகொண்டு
போதமகங்கண்முன்செய் தலமேவிக்
காதிபயந்தமைந்தன் வேள்விதொடங்கவன்று
காதுதல்விஞ்சுதம்பி யவனோடே
கார்முகமுந்தெரிந்து வார்கணையுங்கைகொண்டு
காவல்புரிந்துநின்ற பெருமாளே.

[குறிப்பு:— காமன்-மன்மதன். குழல்-கூந்தல். கோதை-மாலை. சால-மிகவும். கோரணி-அருவருக்கத்தக்கசெயல். பூபதி-அரசன். மாவலி-மஹாபலி. போத-மிகவும். மகம்-யாகம். காதிபயந்தமைந்தன்-விசுவாமித்ரன். வேள்வி-யாகம். காதுதல்-கொல்லுதல். விஞ்சுதல்-மேம்படுதல். கார்முகம்-வில். வார்-பெரிய-நீண்ட.]

35. மிடியர்வாலிபம் வாயாடம்பர
லகிரியேதுமி லாரோதுங்கலை
விழுமியோர்சின நாணார்தங்குல மநுராக
விழைவிலாதவர் பாலாமைங்கணை
கொடையிலார்பொரு ளால்வாய்தன்பெலம்
விரவுபேடிகை வாள்வேல்வெம்பசி யிலையானே
ரிடையின்மேவிய வூணுமின்சுவை
குருவின்வாய்மொழி பேணார்மந்திர
மிறைவன்மார்பு பெறுதாள்கொங்கைகள் இவைபோலே
எனது ஞானமும் வீணேமங்கின
வதனைவேறுப டாதேபிங்குன
திருசரோருக சீர்பாதந்தனில் விடுவேனோ

---

1. வேசையர். 2. நண்பி னெடிதேகி.

அடைவுசேர்முனி மாயாகஞ்செய
நெடியசாலையி னூடேசென்றிடு
மளவிலேவினை மாறுவஞ்சகர் படைமாரி

யனலமாமென மேலேயுந்தியு
முனியைநாடியு நீள்போர்கண்டிட
வரியதோர்சர கூடாலங்க்ருத மதுகோலிக்

கடுகியேயெம மாதாவின்பழி
தருதியாலென மேலேவந்தடர்
கபடதாடகை பேருமைந்தரின் மலைவீசுங்

கரசுவாகுவு நேரேவிண்புக
விரகினாலொரு மாரீசன்பொரு
கடலிலேவிழ வோர்பாணந்தொடு பெருமாளே.

[குறிப்பு:— மிடியர்வாலிபம்-தரித்திரரின் இளமை. வாயாடம்பரலகிரி-உத்ஸாகமாகப் பேசுந்திறம். விழுமியோர்சினம்-பெரியோருடையகோபம். அநுராகவிழைவு-சிற்றின்பவிருப்பம். ஐங்கணை-(மன்மதனுடைய) பஞ்ச பாணங்கள். நால்வாய்தன்பெலம்-யானையின்வலிமை. பேடிகைவிரவுவாள்வேல் எனக் கூட்டுக. விரவு-பொருந்திய. இறைவன்-தலைவன்-நாயகன். கொங்கை-தனம். சரோருகம்-தாமரை (மலர்). அடைவு-முறை. முனி-விசுவாமித்திரன். வினைமாறு வஞ்சகர்-தீவினைநீங்காத அரக்கர். படைமாரி-சரமழை. அனலம்-அக்கினி. உந்தி-செலுத்தி. சரகூடாலங்க்ருதம்-அலங்காரத்தையுடைய சர கூடம். கோலி-அமைத்து. கடுகி-விரைந்து. எம-எங்களுடைய. மாதா-தாய். அடர்-நெருங்கிய. கரம்-கை. விண்புக-இறக்க. விரகு-உபாயம். பொருகடல்-(அலை) மோதுகின்ற கடல். மிடியர்வாலிப முதலிய பதினொன்றும் எண்ணடுக்காய் நின்று உவமையாயின.]

36\. மடமகளிர் மாட்டின்மாட்டினை
விரகியென நாட்டிலோட்டினை
வறுமைமுது நீர்க்குள்வீழ்த்தினை பொருண்மீதே

மனமுறுப நாக்கிலாக்கினை
தன்முடைய பேர்க்கியார்க்குமென்
வாவுசொலி யேற்கநாக்கினை பிணியாகுங்

கொடியகன லூட்டியாட்டினை
யசடனெனும் வார்த்தைநாட்டினை
குறுகினபி ராத்திநாட்களு மினிநீயென்

குறைமுழுது மாற்றியேற்றதொ
ரடியரொடு கூட்டிவாட்டமில்
குரைகழல்கள் காட்டிவீட்டினை யருள்வாயே

நெடுமுனிவர் கூட்டமேத்திய
மறையினொலி சாற்றவேற்றதொர்
நெறிமுறையின் வாய்த்தசாத்திரம் வழுவாதே

நிலைமைபெறு சூத்ரவாக்கிய
கரணவகை யாற்பிராத்தியி
னிலமுழுது காட்டவார்த்தெழு தவராசன்

அடுகனலை மூட்டிமாட்டுறு
சமிதைவகை போட்டுமூர்த்திக
ளமரர்தச நூற்றுநேத்திரர் களிகூர

அவியுணவை யூட்டியீட்டிய
மகமினிது காத்துமேற்படும்
அவபிருத தீர்த்தமாட்டிய பெருமாளே.

[குறிப்பு:— விரகி-காமநோயுடையான். வறுமைமுதுநீர்-தரித்திரமாகிய பெரியகடல். எற்க-யாசிக்கும்படி. நூக்குதல்-தள்ளுதல். பிராப்திநாள்-கிடைத்த ஆயுட்காலம். சூத்ரவாக்கியகரணவகை-கல்பஸூத்திரத்திற்சொல்லியசடங்குகள். பிராத்தியின் நிலம்-உத்தேசியமான யாகபூமி. தவராசன்-விசுவாமித்திரன். மாட்டுறு-பக்கத்தேயுள்ள. தசநூற்றுநேத்திரர்-விஷ்ணு. அவபிருத தீர்த்தம்-யாகமுடிவில் ஆடும் நீராட்டம்.]

37. படிகட்டிய வேதவிதிப்படி நெறிநிற்பவ ரேதெரிசித்திடு
பதுமப்பத நாடுறுசித்தமு மநுபூதிப்
பரதத்துவ ஞானவிளக்கமு மருளித்தொலை யாதக்ருபைக்கடல்
படியப்படை யாமலெனைத்தின மடவார்தம்

மிடையிற்சுழி சேர்கலவிக்கட னடுவிற்படி யாமனநிற்கவு
மிசையப்பொரு டேடியமைக்கவு மதுபேணி

இடருற்றுவி டாதுதவிக்கவு மயலிற்கொடி யாரதுகைக்கொள
யமனுக்குயி ராகியிறக்கவும் விடலாமோ

முடுகிப்பொரு பூசலரக்கரை மகரக்கட லூடுதுரக்கவு
முடிதிட்டென வீழவறுக்கவு நதிபோலே

முடுகப்படு சோரிநிறைக்கவு நெடுகப்பிண ராசிகுவிக்கவு
முதிரக்கினி யோமமுநிட்டையு மழியாதே

கடுகிச்சர கூடம்வளைக்கவு மகமிப்படி பேணவுமொப்பறு
கலைகற்றவ னுரெனநற்றவன் மகிழ்வாகக்

கனமுத்தெறி சானவிபிற்பட மிதிலைப்படை வீடுதனிற்புகு
கருணைக்கட லே[1]யென்மனத்துறை பெருமாளே.

[குறிப்பு:— பூசல்-போர். துரக்க-செலுத்து. முடுக-விரைந்துசெல்ல. சோரி-இரத்தம். ராசி-கூட்டம். சானவி-கங்கை.]

38. பரணியுலாவொருசற்றும்பொழுதிற்
சொலவொருகோவையடுக்குங்கிளவிட்
பயனுமொரேரெமிடத்திற்புகலப் பலநூலும்

பகரவிவாதவகைக்கும்புகுதப்
பெரியபுராணகதைப்பண்பறியப்
பதறியவாசொடுசித்ரங்கள்வாக் கவிபாடப்

பெருவிருதேநிறுவிக்கொண்டனமற்
புததருவேமழைகைக்கொண்டகொடைப்
பிரளயமேயினிநிற்குங்கவிதைத் துறையேகேள்

பிடிபணமாழிபதக்கம்பருமுத்
தணிமணியாடைமிகத்தந்திசையைப்
பெறுகெனலோபகுணக்குண்டகரைப் புகழ்வேனோ

1. விபவத்துறு.

பொருதொருதாடகையைக்கொன்றயவிற்
றவமுனிவேள்விமுடிக்கும்பொழுதப்
புகைவிழியாள்பெறுமைக்கண்டகரிற் கொடியோனைப்

புணரியின்மூழ்கவிடுத்துஞ்சமரத்
தொருவனைவானிடைவைத்துந்தழலைப்
பொறியவியாதுபுரக்குங்கருணைத் திருமாலே

அருண்மிகுகோதமனுஷ்ணங்களுமற்
றுயர்வலிமீதுதுடிப்புங்கொளமுற்
றடன்மகவான்மனமுட்கும்படிமுற் றவனூர்நின்

றடிவரலாறுகண்முற்றும்புகலத்
திருமறைநாலுமணக்கும்பொடியிட்
டகலிகைசாபமகற்றுஞ்சரணப் பெருமாளே.

[குறிப்பு:— சற்றப்பொழுதென்பது-சத்தநோக்கிச் சற்றம்பொழுதென நின்றது மெலித்தல் விகாரம். விருது-கொடி. நிறுவுதல்-நிலைநாட்டல். தரு-கற்பதரு. பிடி-பெண்யானை. ஆழி-மோதிரம். புகைவிழியாள்-தாடகை. கொடியோன்-மாரீசன். புணரி-கடல். சமரம்-போர். ஒருவன்-சுவாகு. புரத்தல்-காத்தல். கோதமன்-கௌதமன். உஷ்ணம்-வெம்மை (இந்திரனிடத்தும் அகலிகையிடத்தும் உண்டான) சினம். முற்றடன்மகவான்-நிறைந்தவலிமையுடைய இந்திரன். முற்றவன்-விசுவாமித்திரன். அடிவரலாறு-பழங்கதை. சரணம்-திருவடி,]

39. மதியுநெடும்ப்ரபை யேற்றபானுவு
மிளிர்பகலுங்கன ராத்ரியானது
[1]மருவியசந்தியும் வாய்த்தபூமியு நெடுநீரும்

வளர்கிளரங்கியு மார்த்தவாயுவும்
வெளியுமடர்ந்திடு கூற்றமானது
மகிழறமும்பல வாத்துமாவுமிவ் வகையாவுஞ்

சிதைவறநின்றிடு சாக்ஷியாய்நடு
வொருகணமும் [2]பிரி யாத்துராகத
சிறையிலிருந்திடு வேற்கியாதொரு வினைதானுந்

1. மருவிருசந்தியும். 2. பெயராத்துராகத.

திமையளவுந்தவ னுக்கொரு தூதன்
னெறியினடந்திட [1]மாட்சிசேரவொர்
தினையளவுன்கழல் காட்டினனுமென் னிடர்போமே

மிதிலைநெடும்படை வீட்டைமேவுமு
னகலிகைதன்குறை தீர்த்துநாரிதன்
வினைவைவிளம்புதி யாற்றபோதன வெனலோடும்

[2]விரகமொடிந்திரர் காக்கைகூவினர்
கவுதமராங்குட னுற்றைமேவினர்
விரைவின்முயங்கினர் பார்த்தகோதமன் மகவான்மேன்

முதிர்பலலிங்கம தேற்றினரிவள்
வடிவுகலென்றிட [3]வீழ்த்தினாரவர்
முறையிடல்கண்டுக னக்கினரிவள் நினதாளான்

முதலுருவட்பெற நாட்டினர்கதை
யடியில்விளைந்ததிம் [4]மாத்ரமேயென
முனிசொலவங்கது கேட்டவானவர் பெருமாளே.

[குறிப்பு:— மதி-சந்திரன். ப்ரபை-ஒளி. பாநு-சூரியன். மிளிர்தல்-விளங்குதல். அங்கி-அக்கினி. ஆர்த்த-சப்தித்த. வாயு-காற்று. வெளி-ஆகாயம். அடர்தல்-கொல்லுதல். கூற்றம்-யமன். நாரி-அகலிகை. முயங்குதல்-கூடுதல். மகவான்-இந்திரன். லிங்கம்-(பெண்) குறி. அவர்-இந்திரன்.]

40. கயலைக்கறுவுகபாடவஞ்சக
சரிதப்ரபலவிசாலசம்ப்ரம
கலகக்கபடவிகாரவஞ்சன விழிமானார்

களபப்பரிமளவாசபங்கய
முகிழத்துபயசமானமங்கல
கடினப்புளகிதமானகொங்கைகள் பிரியாதே

1, மாட்சியொருமொர் திருவடியுந்தனி; மாப்ரவாசமொர் தினையளவுன் கழல். 2, விரகுடனிந்திரர். 3. வீட்டினாரவர். 4. மார்க்கமே.

சுபநக்கலிவிநோதரஞ்சித
வசனப்ரியவநுராகவிங்கித
சரசச்சுரதசமேளசிங்கியில் வசமாகிச்

சருவத்திருவுளமோநின்னபரை
மருவத்திருவுளமோவுவந்தது
தனையிப்பொழுதடியேனுணர்ந்திட வுரையாயோ

வயனுட்படுமிமையோர்பணிந்தெழ
விடைபெற்றகலிகைதானகன்றிட
வருமைத்தவமுனிராசன்முன்செல வுயிர்போலே

யடியிற்பிறகிளையோனும்வந்திட
வொருவிற்கரமிசையேபொலிந்திட
வருகிற்றெரிவையர்மோகனங்கொள விதனோடே

வெயிலைத்தருமணிமேடையின்புற
மயிலொப்பெனவிளையாடுமிந்திரை
விழிதைத்திருபுயம்வாடவங்கவள் முலைமீதே

விமலக்கமலவிலோசனம்புக
வொருவர்க்கொருவரவாவுறும்படி
மிதிலைத்தெருவழியேநடந்தருள் பெருமாளே.

[குறிப்பு:— கயல்-ஒருவகைமீன். கறுவுதல்-சினத்தல். கபாடம்-காப்பு. சரிதம்-நடை. சம்ப்ரமம்-டம்பம். அஞ்சனம்-மை. விழி-கண். மானார்-பெண்கள். களபம்-கலவைச்சாந்து. பங்கயம்-தாமரை. முகிழத்து என்பதில் அத்துசாரியை. முகிழ்-மொட்டு. உபயம்-இரண்டு. ரஞ்சிதவசனம்-இனியபேச்சு. சருவுதல்-நழுவுதல். அயன்-பிரமன். இமையோர்-தேவர்கள். கரம்-கை. தெரிவையர்-பெண்கள். மோகனம்-மயக்கம். இதம் இதன் என்றானது போலி. இதம்-நன்மை. இந்திரை-இலக்குமி (சீதை). விமலக்கமல விலோசனம்-குற்றமற்றதாமரைமலர்போலும் கண். அவா-ஆசை.]

41. வனிதைமருவுபுதுவைகுருகை
பிரிதிபுலிசைசிறுபுலிசைவெள்
வரைகணபுரம்வடமதுரைவி ணகரேநீர்

மலைகடிநகர்கடிகைதுவரை
நறைசைவதரிகரிகிரிதிரு
மழிசையரிவிணகரிதிருநை மிசைமாவி